RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# பெரும்பாணாற்றுப்படையில் நிலம் சார் உணவும், விருந்தோம்பலும்

த. கலைச்செல்வம் [அ, *], வ. ரில்பர்ட்ர்ஜெனார்த்தனன் [அ]

[அ] தமிழ்த்துறை, தூய சவேரியார் தன்னாட்சி கல்லூரி, பாளையங்கோட்டை-627002, தமிழ்நாடு, இந்தியா.

# Land-based food and hospitality in Perumbanatruppadai

T. Kalaiselvam [a, *], V. Rilbert Janarthanan [a, *]

[a] Department of Tamil, St. Xavier's College (Autonomous), Palayamkottai-627002, Tamil Nadu, India

* Corresponding Author: vrilbert@gmail.com

Received: 18-04-2024
Revised: 23-06-2024
Accepted: 02-07-2024
Published: 02-08-2024

Check for updates

## ABSTRACT

During the Sangam period, people depended on the departments. They lived on food from their land. Based on that, in one of Sanga literature's Aartuppai books, Perumpanaartuppail Panar, the poet who is receiving a gift from Ilanthirayan, on the way of Panan, who is living in poverty, talks about the merit of the gift, the food and hospitality given to them by the people of Mullai, Marutham, weaving, Balai, Kurinji, who live there in this article.

**Keywords:** Food, Perumbanatruppadai, Sangam Period, Aartuppai Books

## முன்னுரை

மனிதன் உயிர் வாழ்வதற்கு அடிப்படை தேவையானவை உணவு, உடை, இருப்பிடம் போன்றவை ஆகும். இவற்றுள் உணவே இன்றியமையாததாகும். மனிதன் உயிர்வாழ்வதற்கு தேவையான அனைத்து பொருள்களையும் நமக்குக் கொடுத்தது இயற்கை ஆகும். ஆடையில்லாமனிதன் அரைமனிதன் என்பதை போல, உணவில்லா மனிதன் உயிரற்றவன் என்றும் கூறுவர். மனித உடம்பினை உணவின் பிண்டம் என்றும், அவ்வுடம்பு உயிரை சுமந்து கொண்டிருக்க வேண்டுமானால் அதற்கு உணவினைக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என சங்க இலக்கியப் புறப்பாடல் கூறுகின்றன. பழந்தமிழர்கள் தங்களது நிலம் சார்ந்து அந்நிலத்தில் கிடைக்கும் தானியங்கள், பழங்கள், உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து வாழ்கின்றனர். சங்க இலக்கிய பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்களில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையில் மக்களின் வாழ்வியலில் உணவும், விருந்தோம்பலும் எவ்வாறுக் காணப்பட்டது என்பதை ஆராய்வதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## பெரும்பாணாற்றுப்படையில் உணவும், விருந்தோம்பலும்

பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் மன்னன் இளந்திரையனிடம் இருந்து பரிசில் பெற்றும் வரும் பாணன், வழியில் வறுமையில் வாழும் மற்றொரு பாணனை மன்னன் இளந்திரையனிடம் பரிசில் பெறுவதற்கு ஆற்றுப்படுத்துவது அல்லது வழிப்படுத்துவது ஆகும். பெரும்பாணாற்றுப்படையில் பாணர்கள் மன்னனிடம் பெற்ற பரிசின் சிறப்பையும், செல்லும் வழியில் கிடைக்கும் உணவையும், விருந்தோம்பலையும் கூறி மற்றொரு பாணரை வழிப்படுத்துவதாகும். செல்லும் வழியில் உணவினைப் பற்றிய கவலை இல்லை என்றும், அரசனைப் போற்றிப்பாடாமல்

துஞ்சினாலும், மன்னனது பெயரைச் சொன்னாலே அவர்களுக்கு விருந்து அளிப்பர் என இலக்கியங்கள் கூறுகின்றன.

## விருந்தோம்பல் முறை

மனையில் வாழ்கின்ற மகளிரின் களமாக இல்லறமே சித்தரிக்கப்படுகிறது. இல்லறம் இனிய அறம் ஆகும். இல்லறத்தில் வாழும் மகளிர் செந்நெல்லால் ஆகிய சோற்றினை விண்மீன் போன்ற வெள்ளிக் கலங்களைப் பரப்பிதாய் பிள்ளையைப் பார்ப்பது போல அம்மக்கள் முகம் மலர்ந்து இனிமையாக விருப்பத்துடன் உபசரிப்பர். இதனை,

“விரும்புடைமரபின் கரப்படைஅடிசில்,

மீன்பூத் தன்னவான்கலம் பரப்பி

மசுமுறைமசுமுறைநோக்கிமுகன் அமர்ந்து” (பெரும்பாணாற்றுப்படை 476-478)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம். மேலும்

“மோப்பக் குழையும் அணிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து” குறள் 90

மென்மையான அனிச்ச பூவானது முகர்ந்து பார்த்தாலே வாடிவிடும். அதே போல வீட்டாரின் முகம் மாறுபடுவதை கண்ட மாத்திரமே சிறந்த விருந்தினரின் முகம் வாடி விடும். அதன் மூலம் இம்மக்களின் விருந்தோம்பல் முறையை அறிய முடிகின்றது.

## முல்லை நில மக்களின் உணவும், விருந்தோம்பலும்

காடும், காடு சார்ந்த முல்லை நிலத்திற்கு பாணர்கள் இரவில் சென்றடைவதால் அவர்களுக்கு அங்கு பயம் வேண்டாம் அங்குள்ள குரம்பைகள் கதவுகளைக் கொண்டிருக்கும், பரண் போன்ற கட்டிலையும் அவர்களுக்குக் கொடுக்கின்றனர். ஆயர்குல மக்களின் ஆநிரைகளின் பாலைக் கறந்து அதனை, பால், தயிர், வெண்ணெய், மோர் எடுத்து அதனை விற்று, தங்களது இல்லத்திற்கு மேலும் ஆநிரைகளை வாங்கி தங்களது வாழ்வினை பெருக்கி கொள்கின்றனர் என்பதனையும்,

“ஆம்பிவான்முகையன்ன கூம்புமுகி

முறையமை தீந்தயிர்கலக்கி நுரை தெரிந்து

புகர்வாய்க் குழிசிபூஞ்சுமட் டிரீஇ

நாண்மோர்மாலும்” (பெரும்பாணாற்றுப்படை156 -160)

என்ற பாடல் வரிகள் மூலம் முல்லை நிலமக்கள் பால், தயிர் முதலியவற்றை மற்றொரு நிலமக்களுக்கு கொடுத்து அதற்கு மாறாக தானியங்களைப் பெற்று உண்டனர் என்பதனை அறிய முடிகிறது.

பால், தயிர் முதலியவற்றைக் கொடுத்து பண்டமாற்றினால் பெறப்படும் தானியங்களை உண்டனர் என்பதனை பற்றி சு. வித்தயானந்தன், தமிழர்- சால்பு- பக்-204 கூறியுள்ளார். மேலும் முல்லை நிலமக்கள் வரகின் சோற்றில்; அவரை விதைப் பருப்பை கலந்து கும்மாயம் என்ற பருப்புச் சோற்றை உண்டனர் என்பதனை அறியப்படுகின்றன.

“அவரைவான் புழுக்கு அட்டி பயில்வுற்று

இன்சுவை மூரல் பெறுகுவீர்” (பெரும்பாணாற்றுப்படை194 - 195)

எனப் பெரும்பாணாற்றுப்படைவரிகள் மூலம் அறியமுடிகின்றது. மேலும் ஆயர் இல்லங்களில் தங்கும் விருந்தினர்களுக்கு நண்டினது பார்ப்புத் திரளையொத்த தினையரிசியாகிய சோற்றைப் பாலுடன் கலந்து கொடுத்தனர் என்பதனையும்,

"மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பி

னிருங்கிளை ஞெண்பின் சிறுபார்ப் பன்னபெரும்

பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர்"

என்ற பாடல் வரிகள் மூலம் தினையரிசிச் சோற்றுடன், பால் கலந்து தங்களது இல்ல விருந்தினருக்கு கொடுத்தனர் என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

## மருத நிலமக்களின் உணவும், விருந்தோம்பலும்

வயலும், வயல் சார்ந்த இடங்களில் வாழும் மக்கள் வெண்ணெல்; அரிசியை மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதனை,

"வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி

மனைவாழ அளகின் வாட்டொடும் பெறுகுவீர்" - (பெரும்பாணாற்றுப்படை 254- 255)

என்ற பாடல் வரிகள் மூலம் மருதநில மக்கள் நெற்சோற் சோற்றைப் கோழிப் பெடையினாற் சமைத்தப் பொரியலோடு உண்டனர். கருப்பஞ்சாற்றைக் காய்ச்சும் புகை சூழ்ந்த கொட்டில்கள் நிறைந்தது ஆரவாரிக்கும். அவ்வாலைகளில் கரும்பின் இனியசாற்றை விருந்தாகப் படைக்கின்றனர்.

மேலும் குளத்தில் மீன்பிடித்து வாழும் வலைஞர்கள் பொங்கல், அடை, அரியல், மீன்சுட்டு வறுவல்கள் போன்றவற்றை உணவாகப் படைக்கின்றனர். அரிசியைக் கழிப் போன்று சோறாக்கி, அடை போன்ற உணவை சோறாக்கி அதனுடன் தேன்கலந்து காலை, மாலை என உணவாகப் படைக்கின்றனர். மீன் வறுவலை உணவாகப் படைத்தனர். மருத நில மக்கள் நெல்லால் செய்த கள்ளை பகுகினார் என்பதனை

"உவவு மடிந்து, உண்டு ஆடியும்" (பட்டினப்பாலை-93)

போன்ற பாடல் வரிகள் மூலம் கள் உண்டனர் என்பதைனையும் அறிய முடிகிறது. மேலும் அந்தனர்களுக்கு சோறும், மோர்குழம்பும், மாதுளைப் பச்சைக்காயால் செய்த ஒருவகையான கறியும் அதனுடன், கறிவேப்பிலைப் போட்டு உணவாக தயார் செய்து விருந்தினைப் படைத்தனர். மாவடு போன்ற ஊறுகாய் போன்ற பொருள்களையும், பட்டினத்தார்கள் வாழும் தோப்புக் குடில்கள், உழவர்கள் பலாச்சவை, பதநீர், வாழைப்பழம், இளநீர், பனைநுங்கு, முதிர்ந்த சேப்பங்கிழங்கு விருந்தாகப் படைக்கின்றனர். இதன் மூலம் மருதத்தினையில் வளமை பொருந்திய நிலையினையும் பல்வேறு விதமாக உணவினை விருந்தாக விருந்தோம்பல் செய்கின்றனர் என்பதனையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

## நெய்தல் நிலமக்களின் உணவும், விருந்தோம்பலும்

நெய்தல் நிலமக்கள் கடலும் கடல் சார்ந்த பகுதியில் வாழ்கின்றனர். நெய்தல் நிலமக்கள் கள்ளினை உண்டனர் என்ற செய்தி மட்டும் பெரும்பாணாற்றுப்படையில் காணப்படுகிறது. கள் செய்யும் முறைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது என்பதனை,

"வெந்நீர்அரியல் விரல் அறைநறும்பிழி

தண்மீன் சூட்டொடுதளர்தலும்" - (பெரும்பாணாற்றுப்படை 281 - 282)

என்றப் பாடல் வரிகள் மூலம் கள் செய்யும் முறைப் பற்றி கூறப்பட்டுள்ளது. தவிடு நீக்கப் பெறாத சத்து நிறைந்த அரிசியை நல்ல களியாகத் துழாவி அட்டக்கூழை மலர்ந்தவாயையுடைய

தட்டுப் பிழாவில் இட்டு உலரும்படி ஆற்றிப் பாம்பு கிடக்கும் புற்றில் கிடக்கும் பழஞ்சோற்றைப் போன்று பொலிவு பெற்ற புறத்தையுடைய நல்லநெல் முனையை இடித்து அதனை அதிலே கலந்து வலியவாயினையுடைய சாடியில் இட்டு வெந்நீரில் வேகவைத்து நெய்யரியாலே வடிகட்டி, விரலாலே அலைந்து கள்ளினைப் பிழிந்து எடுப்பர். அதனுடன் பச்சை மீன் சூட்டோடு தளர்ந்து செல்லும் நிலையில் உண்பர். இதன் மூலம் நெய்தல் நிலமக்கள் கள்ளுடன் பச்சை மீனையும் உணவாக பயன்படுத்தினர் என்பதனை அறியமுடிகின்றது.

தொண்டைநாட்டுப் பகுதியில் நெல்லையிடித்து மாவாகிய உணவை ஆண்பன்றிக்கு இட்டு கொழுக்கவைத்து, அந்த ஆண் பன்றியின் இறைச்சியை உணவாகவும் அதனுடன் களிப்பு மிகுந்த கள்ளையும் பருகினர் என (பெரும்பாணாற்றுப்படை - 339- 345) வரிகள் மூலம் அறியமுடிகிறது.

## பாலை நில மக்களின் உணவும், விருந்தோம்பலும்

மணலும், மணல் சார்ந்த பகுதியில் வாழும் பாலை நிலமக்கள் பன்றி, முயல் முதலியவற்றை வேட்டையாடி உண்டனர் என்பதனை,

“அரைநாள் வேட்டம் அழுங்கின், பகல்நாள்

பகுவய் ஞமலியோடுமைப்புதல் எருக்கி

தொகுவாய் வேலிதொடர்வலைமாட்டி” - (பெரும்பாணாற்றுப்படை 111-114)

என்ற பாடல் வரிகள் மூலம் பாலை நிலத்தில் உணவு உற்பத்திக்கு எந்தவழியும் இல்லை என்பதனால் அவர்கள் பாலை நிலத்தில் வேட்டையாடி உணவினை உட்கொண்டனர் என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது, ஆனால் அவர்களின் வாழ்வியலில் வெண்சோறு இவர்களுக்கு உணவாக இருந்தது என்பதனைப் பற்றி சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

"எயிற்றிய ரட்ட வின்புளி வெஞ்சோறு" - சிறுபாணாற்றுப்படை -175

பாலை நில மக்கள் எறும்புப் புற்றில் இருந்து புல்லரிசியை எடுத்து அதனை நிலவுரலிற் குற்றிச் சமைத்த உணவை உப்புக் கண்டத்தோடு உண்டனர் என்பதனை,

"நுண்புல் அடங்கிய வெண்பல் எயிற்றியர்

பார்வையாத்த பிறை தான் விளவின்

வரராரது அட்ட, வாடு ஊன் புழுக்கல்" -(பெரும்பாணாற்றுப்படை 94-100)

## குறிஞ்சி நிலமக்களின் உணவும், விருந்தோம்பலும்

மலையும், மலை சார்ந்த பகுதியில் வாழும் குறிஞ்சி நிலமக்கள் இவர்கள் தங்களின் வீரத்தைக் கொண்டு உணவினைப் பெறுகின்றனர். பகை அரசனின் நாட்டில் பகலில் சென்று போரிட்டு அங்குள்ள கறவைப் பசுக்களை கவர்ந்து வந்து அதனைக் கொடுத்து நரவு என்னும் கள்ளைப் பெறுகின்றனர். இது பழச்சாற்றில்; இருந்து எடுக்கும் ஒருவகையான கள் உணவைச் சேர்ந்ததாகும். கள்ளைப் பெற்று பின்பு தனது வீட்டிற்கு சென்று சாதம் வடித்த கஞ்சியால் செய்யப்படுகின்ற தோப்பி என்கின்ற ஒரு வகையான உணவை உண்கின்றனர் என்பதனை அறிந்து கொள்ளமுடிகின்றது.

## முடிவுரை

சங்க இலக்கிய ஆற்றுப்படை நூல்களுள் ஒன்றானப் பெரும்பாணாற்றுப் படையில் மக்கள் திணைகள் சார்ந்து பல்வேறு விதமான முறையில் உணவினை உட்கொள்கின்றனர். குறிஞ்சி நிலமக்கள் பசுக்களைக் கொடுத்து சாதம் வடித்த கஞ்சியால் தொப்பி என்னும் ஒருவகையான கள்ளைப்

பருகியுள்ளனர் என்பதனையும், மருதநில மக்கள் தங்களின் நிலங்களில் விளைந்த நெற்சோற்றை, கோழிக்கறியுடன், கரும்புசாறு, பலா, இளநீர் போன்ற பல்வேறு விதமான பொருள்களை உணவாக விருந்து படைத்தனர் என்பதனையும், பாலை நில மக்கள் விலங்குகளை வேட்டையாடி அதன் இறைச்சியை உண்டனர் என்பதனையும், முல்லை நில மக்கள் பாலுடன், தயிர், நெய், தினைச் சோற்றை உண்டனர் என்பதனையும், நெய்தல் நிலமக்கள் நெல்லில் இருந்து கள்ளை எடுத்தும், அதனுடன் பச்சை மீனையும், கள் தயாரிக்கும் முறையையும், பன்றியின் இறைச்சியையும் உண்டனர். இதன் மூலம் பெரும்பாணாற்றுப்படையில் திணை சார்ந்து வாழும் மக்கள தங்களின் உணவினைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. அதனுடன் திணை சார்ந்துவாழும் மக்களின் விருந்தோம்பல் பண்பினையும் இக்கட்டுரையின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

## References

முனைவர். இரா.மோகன், பெரும்பாணாற்றுப்படை, உரைஆசிரியர், பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதற் தொகுதி), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., அம்பத்தூர்,சென்னை - 600 098. முதற்பதிப்பு - ஏப்ரல்-2004

முனைவர். வி. நாகராசன், மதுரைக்காஞ்சி, உரைஆசிரியர், பத்துப்பாட்டு மூலமும் உரையும், (இரண்டாம் தொகுதி), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., அம்பத்தூர், சென்னை - 600 098.

முனைவர் பா. வளன் அரசு, திருக்குறள் விளக்கம், சூர்யா பதிப்பகம், 41, த.மு. கட்டடம், திருநெல்வேலி - 627001

முனைவர். வி. நாகராசன், பட்டிணப்பாலையம், உரைஆசிரியர், பத்துப்பாட்டு மூலமும் உரையும், (இரண்டாம் தொகுதி), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., அம்பத்தூர்,சென்னை - 600 098. முதற்பதிப்பு - ஏப்ரல்-2004

முனைவர். சு. வித்யானந்தன், தமிழர் சால்பு, பேராசிரியர், பாரி புத்தகப் பண்ணை, 576, பைகிராப்ஸ் ரோடு, திருவில்லிக்கேணி, சென்னை - 600 005.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License